அமைச்சராக இருக்கிற மாண்புமிகு எஸ். டி. எஸ். அவர்கள் இருந்தார்கள் என்று, அவரும் இருந்தார். அவர்களுக்குப் பிறகு மாண்புமிகு உறுப்பினர் செஞ்சி ராமச்சந்திரனும் இருந்தார். அப்போது தி. மு. க. ஆட்சியிலே இருந்தது. அப்போதே அரசு கவனிக்கவில்லை என்ற கருத்து அவருக்குப் பட்டிருக்குமானால், கவனிக்க வைத்திருக்கலாம், ஆனால் இன்றைக்கு நான் அவருக்கும் இந்த மாமன்ற உறுப்பினர்களுக்கும், ஆசிரியப் பெருமக்களுக்கும் மற்றவர்களுக்கும் சொல்ல விரும்புவதெல்லாம், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தைக் கவனிக்க ஆரம்பித்திருக்கிறது. ஆகவே நாங்கள் நிச்சயமாகக் கவனிப்போம்; இது போன்ற தவறுகள் ஏற்படாத வண்ணம் அரசுக்கு இருக்கின்ற அதிகாரத்தை முழுமையாகப் பயன்படுத்துவோம். ஆகவே யாரும் அதற்காக அச்சப்படத் தேவையில்லை ஐயப்படத்தேவையில்லை. ஆகவே அப்படிப்பட்ட சூழ்நிலையில் இது குறித்து மேலும் விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்ற காரணத்தினால் அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கத் தேவை இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்க வேண்டிய தேவை இல்லை என்ற காரணத்தால் இதற்கு இசைவு மறுக்கப்படுகிறது.

கவன ஈர்ப்புகள்

(அ) அடையார் மல்லிகைப்பூ நகரில் ஏற்பட்ட தீ பத்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் மு. அம்பிகாபதி, டி, ஆர். ராஜாராம் நாயுடு, இரா. தாமரைக்கனி ஆகியோர் கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள். அவர்களுள் ஒருவர் இதை, வருவாய்த்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. மு. அம்பிகாபதி

திரு. மு. அம்பிகாபதி: பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை அடையாரில் உள்ள மல்லிகைப்பூ நகரில் 3-7-1980 அன்று ஏற்பட்ட தீ விபத்தில் 200 வீடுகள் எரிந்து சாம்பலானது குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, 3-7-1980 அன்று காலை 9-45 மணியளவில் சென்னை அடையாரில் உள்ள மல்லிகைப்பூ நகரில் ஏற்பட்ட தீ விபத்தில் 55 குடியிருப்புகளும், ஓர் கால்நடை தொழுவமும் பாதிக்கப்பட்டன. உயிர்ச்சேதமோ, கால்நடைச்சேதமோ இல்லை. ஆனால் ஐந்து வயதிற்குட்பட்ட இரு சிறார்களும், 40 வயதான ஒருவரும் இலேசாகக் காயமடைந்தனர். இவர்களுக்கு தக்க மருத்துவ உதவி அளிக்கப்பட்டது. மொத்தச் சேதம் மதிப்பு சுமார் ரூ. 50,000. தீ விபத்திற்கான காரணம் இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லை. பாதிக்கப்பட்ட குடும்பங்கள் அடையாறிலுள்ள ராணி மெய்யம்மை பெண்கள் உயர்நிலைப்பள்ளியில் தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு, சென்னை மாநகராட்சியினரால் உணவுப் பொட்டலங்களும் வழங்கப்பட்டது. பாதிக்கப்பட்ட 55 குடும்பங்களுக்கு தலா ரூ. 100 வீதம் நிவாரணத் தொகை வழங்கப்பட்டது. பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் 5 கிலோ அரிசி, ஒருபுடவை, ஒரு வேஷ்டி வழங்கப்பட்டுள்ளது. வருவாய்த்துறை பலவகை எண். 1647, நாள் 4-7-80-ல் ஆணையிட்டுள்ளபடி மீதமுள்ள ரூ. 100 நிவாரணத் தொகையை வழங்க சென்னை மாவட்ட ஆட்சியர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

திரு. மு. அம்பிகாபதி:—மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சட்டமன்றக் கூட்டம் தொடங்கியதற்குப் பின்னாலே பெரும்பாலும் நிரம்ப தீ விபத்துக்கள் பற்றிய விவரங்கள் வருகின்றன. மாயவரத்திலே தீ விபத்து, மன்னார்குடியிலே, சென்னையிலே பல இடங்களிலே வீடுகள் எரிந்திருக்கின்றன. ஆகவே குடிசைப் பகுதிகளிலே இந்த தீ பரவுவதைத் தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுப்பதோடு, நான் நேற்றைய தினம் கூட உங்களுக்குக் கவனத்திற்குக் கொண்டு வந்தேன். நேற்றைக்கு முன்தினம் கூட பேசினேன்—அவர்களுக்கு அந்த 200 ரூபாய் கொடுக்கிறோம் என்று சொல்லிக் கொண்டு இருக்கிறார்களே தவிர, அதை உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டதற்குப் பதில் இல்லை. அவர்களுக்கு மனம் இருக்கிறது. அவர்கள் முதல்வரிடத்தில் பேச இருக்கிறார்கள் போல் இருக்கிறது. எனவே அவர்களுக்கு 500 ரூபாய் வேண்டும் என்று கேட்டேன். நேற்றைய முன் தினம் 500 கேட்டதற்குப் பின்னாலே நேற்று 501 ரூபாய் கொடுக்க வேண்டும் என்று கேட்டேன். எனவே குடிசைகள் எரிந்தால் அதை மாற்றிக் கட்டிக் கொள்ள ரூ. 550 கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். விலைவாசிகள் ஏறி இருக்கின்றன. எனவே மாண்புமிகு அமைச்சரிடம் இருந்து காருண்யமிக்க பதிலை எதிர்பார்க்கிறேன். நாங்கள் 200 ரூபாய் கொடுத்திருக்கிறோம் என்ற பதிலை அவர்கள் திரும்பச் சொல்லாமல் இருப்பார்கள் என்றும் எதிர்ப்பார்க்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:—தலைவர் அவர்களே, இதுவரையிலும் 80 ரூபாய்கள்தான் கொடுத்து வந்தார்கள். அதற்குப்பிறகு இப்போது 100 ரூபாய் கொடுக்கப்

பட்டது. அந்த 100 ரூபாயை 200 ரூபாயாக உயர்த்தி, 100 தசவிகிதம் உயர்த்தி அவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. விலைவாசி இன்றைக்கு 100 சதவிகிதம் அதிகரிக்கவில்லை என்று உங்களுக்கு நன்றாகத் தெரியும். ஆனால் இன்றைக்கு இருக்கிற நிலைமையிலே 200 ரூபாய்கள் தான் கொடுக்கமுடியும் என்று அரசு கருதி அதை உயர்த்தி இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மழை காலம் வந்து விட்டது. தீப்பிடித்தது பற்றிய நிகழ்வினைக் குறித்தே கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் வந்து கொண்டு இருக்கின்றன. அதை, மாற்றிக் கொண்டு வேறு பொருள் பற்றி வந்தால் நன்றாக இருக்கும்.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மழை காலம் வந்து விட்டதால் தீப்பிடிப்பது குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வரக்கூடாது என்று சொல்கிறீர்கள். சென்னையைப் பொறுத்த வரையில் எப்போதும் தீப் பிடிக்கும், சென்னையில் இருப்பதைவிட கிராமப்புறங்களில் அதிகமான அளவிற்குக் குடிசைகள் இருந்தாலும், அங்கேயெல்லாம் அடிக்கடி தீப்பிடிப்பது இல்லை. ஆனால் சென்னையில் தான் அடிக்கடி தீப்பிடிக்கிற சம்பவங்கள் ஏற்படுகின்றன. இவைகள் இயற்கையாக கிராமங்களில் ஏற்படுவதுபோல் ஏற்படுவது அல்ல. செயற்கை முறையில் தீப்பிடிப்பவை. சென்னையில் நடப்பதால் அவற்றிற்கு பத்திரிகை விளம்பரமும் கிடைக்கிறது. ஆகவே இந்த தீப்பிடிப்பு சம்பவங்கள் தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்று சொன்னால்—இப்போது கொடுக்கும் ரூ. 200 அதிகம் என்று கருதுகிறேன்—அதை அவர்கள் வாங்கி நல்ல முறையில் பயன்படுத்துவது இல்லை—அந்தப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவுப் பொட்டலங்கள் கொடுத்து விட்டு, ரூபாய் கொடுப்பதற்கு பதிலாக அரசே அஸ்பெஸ்டாஸ் போட்ட வீடுகள் கட்டிக் கொடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, தீப்பிடிக்காத வீடுகள் கட்டுவது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

ஆ. வடஆற்காடு மாவட்டத்தில் அரசாங்கக் கடன் வசூல் கெடுபிடி.

திரு. இல. பலராமன்: பேரவைத் தலைவர் அவர்களே, ''வட ஆற்காடு மாவட்டத்தில் கூட்டுறவுத் துறையையும், வருவாய்த்துறையும், கடன்களை வசூல் செய்வதில் கடும் நடவடிக்கை எடுப்பது பற்றிய'' அவசரப்பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:—பேரவைத் தலைவர் அவர்களே,